மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்றுக்கொள்ளாது.

திரு. க. அறிவழகன் : என்னுடைய காதில் விழுந்த அளவில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஆசிரியர்கள் தலைமையாசிரியராக பதவி உயர்வு பெற்றவர்கள் கணக்குத் தேர்வில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டியதில்லை என்று சொன்னதாக அறிகிறேன். ஆனால் மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கேட்டவுடனே கல்வித் துறையில் வேறு ஒரு ஆணை இருக்கிறது, அதன்படி நடத்தப்படும் என்பது போல் தோன்றுகிறது. இதில் எது உண்மை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் கணக்குத் தேர்வில் தேறியிருக்க வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசு ஊழியர்கள் 40 வயது அடைந்து விட்டாலே, அவர்களுடைய பதவிக் காலத்தில் ஒரு பதவி உயர்வுக்கு எக்செம்ஷன் கொடுக்கலாம் என்று விதி இருப்பதைப் போல இந்த உள்ளாட்சித் துறையிலும் அமுல்படுத்தி எக்செம்ஷன் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் ஆற்ற வேண்டிய தலைமை ஆசிரியர் பதவிக்குத் தேவையான தேர்வு அது. அதனால் விதி விலக்குக்கு இடமில்லை.

Children's Hospital, Egmore.

* 39 *Q.*—THIRU KU. MA. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the lack of adequate number of beds, doctors and nurses in the Egmore Children's Hospital, Madras ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

[1978 செப்டம்பர் 7

(அ) சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் போதிய படுக்கை வசதிகளும் மருத்துவர்களும், செவிலியர்களும் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : (அ) சென்னை, எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் போதிய மருத்துவர்களும் செவிலியர்களும் உள்ளனர். பெருகிவரும் நோயாளிகளின் எண்ணிக்கையை நோக்குமிடத்து படுக்கை வசதிகள் மட்டும் சற்று குறைவாக உள்ளன.

(இ) எல்லா மருத்துவமனைகளிலும் படுக்கை வசதிகளை அதிகரிக்கும் திட்டத்தை மத்திய கால திட்டத்தில் (Medium Term Plan) சேர்ப்பது குறித்து மருத்துவமனை கண்காணிப்பாளர்களையும், முதல்வர்களையும் கலந்து மருத்துவக் கல்வி இயக்குனர் அவர்கள் ஆய்ந்து வருகிறார்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : ஆய்ந்து வருவது பற்றி மகிழ்ச்சி. சென்ற கூட்டத் தொடரில் நல்வாழ்வுத் துறை கோரிக்கையின் போது இது பற்றிக் குறிப்பிட்டேன். குழந்தைகள் படுக்கை இல்லாமல் அதாவது தொட்டில்கள் போதிய அளவுக்கு இல்லாமல், கீழே கீரையைப் போல போடப்பட்டிருக்கின்றன. அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பேசினேன். இப்போதும் அதே நிலைதான் அங்கே இருக்கிறது. டாக்டர்கள் இரவு வேலை செய்கிறவர்கள் காலையில் போய்விட்டு பத்து மணிக்கு வந்து மாற்று டாக்டர்கள் இல்லாமல் வேலை செய்கிறார்கள். குழந்தைகள் அனிச்ச மலரைப் போன்றவர்கள். விரைவில் வாடிவிடக் கூடியவர்கள். நம்மைப் போல கஷ்டங்களைத் தாங்கக் கூடியவர்கள் அல்ல. ஆகவே அங்கே குழந்தைகள் நல்லமுறையில் படுக்க உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : 250 குழந்தைகளுக்காக வசதி செய்யப்பட்ட அந்த மருத்துவ மனையில் 1976 ஆம் ஆண்டுக் கணக்கின்படி 410 குழந்தைகளாகவும், 1977 ஆண்டுக் கணக்குப்படி 469 குழந்தைகளாகவும் பெருகியிருக்கின்றன. ஆகவே அங்கே படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்ற காரணத்தால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அன்னத்தின் தூவியில் இருப்பதைப்போல குழந்தைகள் அங்கே பாதுகாக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : வருஷத்துக்கு எத்தனை குழந்தைகள் அங்கே பிறக்கின்றன? அவற்றில் ஆண் குழந்தைகள் எத்தனை? பெண் குழந்தைகள் எத்தனை?

1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : பிறப்பைப் பற்றிய குறிப்பு இந்தக் கேள்வியில் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கான பதிலைச் சொல்லலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : படுக்கைகளின் எண்ணிக்கை 410. குழந்தைகள் இருப்பது 469. அப்படியிருந்தாலும் ஆயிரம் குழந்தைகள் பிறந்தாலும், அன்னத்தின் தூவியில் இருப்பதைப்போல வைத்துப் பராமரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, தொட்டில் தான் நாம் பார்த்திருக்கிறோம். இது ஏதாவது மாற்று ஏற்பாட்டில் அமைக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : அதிகப்படியான குழந்தைகள் வந்தாலும், அவர்களை ஏற்றுக்கொள்ள வசதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

டாக்டர் ஹெச். வி. ஹண்டே : சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, ஸ்டான்லி மருத்துவ மனை, ஜெனரல் ஆஸ்பத்திரி ஆகிய இடங்களில் குழந்தைகள் வார்டு என்று இருக்கிறது. பெரிய ஆஸ்பத்திரியில் உள்ள குழந்தைகள் வார்டு அரைகுறையாக இருக்கிறது. தன்னிறைவு பெறாத அளவில் அது இருப்பதால், அங்கே கொண்டுபோகிற குழந்தைகளை உடனடியாக அவர்கள் குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுகிறார்கள். அப்போது குழந்தைகள் ஆஸ்பத்திரியில் இடம் போதாமல் போகிறது. அதை மாற்றி அந்தந்த ஆஸ்பத்திரிகளில் குழந்தைகள் பிரிவு தன்னிறைவு பெறுமளவில் ஏற்பாடுகள் செய்தால், இந்தக் குறை நீங்க வழி ஏற்படும். அதை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : யோசனையை ஏற்று ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister consider the development of hospital vertically and having more floors so that children from all places round about could be brought there, as is done in Toronto Children's Hospital? It is a place, I think, the Hon. Minister should go and see. There are 23 floors and with the aid of helicopters, children from all over the City are brought to the top of the hospital and from there, by lifts, they are taken to the various floors where operation theatres are located. Will the Government kindly consider such an arrangement being made instead of having the children wings being decentralised to different localities?

[1978 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல வசதிகள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு நிறைய இருக்கிறது. அதற்கான வழிமுறைகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதற்கான யோசனைகளை உறுப்பினர் சொன்னால், ஏற்றுக் கொள்ளலாம்.

(பிற்பகல் 4-40)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் இப்போது 459 படுக்கைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் இதை விரிவாக்கும் திட்டமும் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனவே இதைக் கிட்டத்தட்ட இரட்டிப்பாக்க, அதாவது சுமார் 2,000 படுக்கைகள் வரையாவது உயர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : அதற்கான ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. பி. மாணிக்கம்: மருத்துவ மனைகளில் மூட்டைப்பூச்சித் தொல்லையை ஒழிக்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : மூட்டைப்பூச்சித் தொல்லையை ஒழிக்க மூட்டைப்பூச்சி ஒழிப்பு மருந்துகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

Iron Ore Dust

* 40 *Q*.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THIRU D. V. D'MONTE) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received any representations from the residents of Royapuram on the spread of iron ore dust from the nearby harbour into their houses; and

(*b*) if so, the action taken to eliminate this health hazard?